## 20. தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகம்

### 20.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அலுவலத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(1) |
| வாகன நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

### 20.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்

அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின்போது வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கும், முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கும் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை.

### 20.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 20.3.1 பாதீட்டு முரண்கள்

நான்கு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 20.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 20.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 20.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 20.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 20.5 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| நிதிப்பிரமாணம் 1646 | - | அறிக்கை சமர்ப்பிக்கப்படும் மாதத்தை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| (i) 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(i) ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 02 | - | அலுவலக உத்தியோகத்தர்களின் வருகை, வெளிச்செல்கைகளை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் பந்தி | | பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பதவியணியினர் அலுவலக நேரத்தின் பின்னர் கடமைகளை நிறைவேற்றியதற்கான படிகளும் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) | 2014 யூன் 16 ஆந் திகதிய 16/2014 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | - | தனிப்பட்ட பாவனைக்கு உரித்தற்ற உத்தியோகத்தரினால் பதவிக்கு உரித்தான உத்தியோகபூர்வ வாகனம் வார இறுதியில் தனிப்பட்ட பிரயாணங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்தற்ற உதவிச் செயலாளர் பதவியிலுள்ள இரண்டு உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட பிரயாணங்களுக்காக அலுவலகத்தின் குழாம் வாகனத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியிருந்தனர். |

(இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

---------------------------------------------

| | | |
|---|---|---|
| 2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 1 ஆவது பந்தி | 428,355 | உத்தியோகத்தரொருவர் கடமைப் பிரயாணங்களுக்காக வெளி நாடு செல்வதற்கான விமான பயணச்சீட்டு ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் கம்பனியிலிருந்தோ அல்லது மிஹின் லங்கா தனியார் கம்பனியிலிருந்தோ கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை

--------------------------------------------

| | | |
|---|---|---|
| 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் | 56,868 | வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவிற்காக அமைய மற்றும் இணைந்த படிகள் |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | | கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | சனாதிபதி செயலாளரின் கடிதம்<br>-------------------------------------------- | | |
| | 2012 யூன் 11 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/16 ஆம் இலக்கக் கடிதத்தின் 6 ஆம் பந்தி | 1,146,307 | வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலா முடிவடைந்து நாட்டிற்கு வருகை தந்து 02 வாரங்களுக்குள் இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற நலன்களை உள்ளடக்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 20.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின்போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அலுவலகத்தின் வாகனம் ஒன்று ஏனைய அலுவலக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒரே வடிவிலான பணிகளை நிறைவேற்றுவதற்காக 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் 2014 யூன் 20 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 1337 லீற்றர் எரிபொருள் மற்றும் 2014 யூன் 21 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்காக 615 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதலாவது காலப்பகுதியின் போது மேலதிகமாக 722 லீற்றர் எரிபொருள் அந்த பணியினை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 20.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வுபெற்றுச் செல்வதற்கு 04 நாட்கள் இருக்கையில் ரூபா 1,406,307 செலவில் வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவில் பங்குபற்றியிருந்தார்.

**20.8 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

அலுவலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அலுவலகத்தினால் திருத்தப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2013 | 1.4.1 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை |
| | 1.4.2 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 1.6(i) | அரசாங்க நிர்வாக அங்கீகாரத்திற்கு முரணாக அலுவலகத்தின் பதவி நிலை மற்றும் பதவி நிலையற்ற உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,000 வீதம் சீருடைப் படி வழங்கப்பட்டிருந்தது. |
| | 1.6(ii) | அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக, சீருடைப் படிக்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,000 வீதம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>அலுவலகத்தின் 04 உத்தியோகத்தர்களுக்கு வருகை மற்றும் வெளிச் செல்கை பதிவுகளின்றி சபை அமர்வு நடைபெறும் நாட்களில் நாளொன்றிற்கு ரூபா 750 வீதம் படியாக வழங்கப்பட்டிருந்தது. |

நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கைகளை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.7 உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்கு சபை அமர்வு நடைபெறுகின்ற நாட்களில் போக்குவரத்து கஷ்டங்களின் அடிப்படையில் செலுத்தப்படுகின்ற ரூபா 750 படி செலுத்தப்பட்டிருந்தது.

1.8 வருடாந்தச் சம்பள அதிகரிப்பிற்கு மேலதிகமாக 04 சந்தர்ப்பங்களில் 10 சம்பள அதிகரிப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

## 20.9 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 03 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | 10 | 05 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 17 | - |
| | மொத்தம் | 42 | 36 | 06 |